நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

<u>சி.சி.எண்.117/2017</u>

2018ம் ஆண்டு நவம்பர் திங்கள் 14ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 1வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ஜெயலட்சுமி | வயது: 45 | |
| த/பெ.(அ)க.பெ: | காளி | தொழில்:கூலி | |
| ஊர் | : நிலாவூர் | சமயம்: இந்து | |
| வட்டம் | : ஏலகிரி | சாதி: | |
| மாவ்ட்டம் | : வேலூர் | | |

<u>முதல் விசாரணை:-</u>

நான் ஏலகிரி நிலாவூரில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கின் எதிரிகளை தெரியும். 19.06.2017ந் தேதி காலை 9.00 மணியளவில் என்னுடைய குழந்தைகளை வழக்கம் போல் பள்ளிக்கு அழைத்து சென்று கொண்டிருந்தேன். கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு நான் முதல் எதிரியிடம் சீட்டு கட்டியிருந்தேன். அந்த பணத்தை அவர் திரும்ப கொடுக்காததது சம்மந்தமாக எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டு அவர் என்னை செருப்பால் அடித்து விட்டார். இது சம்மந்தமாக எங்களுக்குள் முன்பகை இருந்துவந்தது. அதனால் நாங்கள் அந்த வழியாக செல்லும் போதெல்லாம் எதிரிகள் தரக்குறைவாக பேசி கேவலமான வார்த்தைகளால் திட்டுவார்கள். கேலி செய்து சிரிப்பார்கள். சம்பவ தேதியன்று நான் பேருந்து நிலையம் வழியாக அழைத்து செல்லும் போது பள்ளியில் வாயில் திறக்கததால் பள்ளிக்கு அருகில் இருந்த ரமேஷ் என்பவர் வீட்டின் எதிரில் நான் குழந்தைகளுடன் நான் நின்று கொண்டிருந்தேன். முதல் மற்றும் இரண்டாம் எதிரிகள் இருவரும் அந்த இடத்திற்கு வந்து முன்றாம் எதிரி என்னை பிடித்து கொள்ள என்னை கட்டையாலும், முதல் எதிரி செங்கல்லாலும் தாக்கினார்கள். எனக்கு மூக்கு, தலையின் மீதும் காயம் ஏற்பட்டது. என்னை திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தர்ாகள். நான் 22 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். போலீஸார் மருத்துவமனைக்கு வந்து என்னை விசாரித்தார்கள். நடந்த விவரங்களை சொன்னேன். எழுதி கொண்டார்கள். நான் அதில் கையொப்பம் போட்டேன். என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ 1 ஆகும். என்னை அடிக்க பயன்படுத்திய கோல் மற்றும் செங்கலலை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல இயலும். தற்போது என்னிடம் காட்டப்படும் கோல்

மற்றும் செங்கல்லில் செங்கல் என்னை அடித்தது தான். அது சா.பொ. 1 ஆகும். கோல் இதுவல்ல. அது நீளமாக செதுக்கி வைத்திருந்தா்ாகள். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:- இல்லை.